**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 108/2020 |
| Name | : Thirumoorthi |
| P.W. | : 4 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**17.07.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

**(சாட்சி இயல்பாக நடக்க இயலாமல் வந்தார் சாட்சி கூண்டில் நிற்க இயலாமல் ஸ்டிரெச்சரில் படுக்கவைத்து விசாரிக்கப்பட்டார்)**

நான் தாராபுரத்தில் வசிக்கிறேன். 09.01.2019 ம் தேதி மதியம் 02.00–02.30 மணி அளவில் நானும், எனது நண்பர் கார்த்திகேயனும் கணியூர் வந்துவிட்டு தாராபுரத்திற்கு என்னுடைய இருசக்கர வாகனம் TN 78 B 1168 TVS Sport வாகனத்தில் கார்த்திகயேன் ஓட்ட நான் பின்னால் அமர்ந்து தாராபுரம் ரோட்டில் சென்று கொண்டிருந்த போது பெரும் பள்ளத்தின் அருகே எதிரே வந்த கார் எங்கள் மீது மோதியது. மோதியதில் நான் நினைவிழந்து 3 நாட்கள் கழித்து கோவை அரசு மருத்துவமனையில் நினைவு திரும்பியது. எனது நண்பருக்கு கை, காலில் அடிப்பட்டது. எங்களுக்கு பின்னால் வேறு ஒரு இருசக்கர வாகனத்தில் வந்த எனது சகோதரர் துக்கையப்பன் இறந்துவிட்டதாக சொன்னார்கள். கார் ஓட்டி வந்தவரை நான் பார்க்கவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்று சரியாக தெரியவில்லை.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் புகாரிலும், போலீசார் விசாரணையிலும் கடந்த 09.01.2019 ம் தேதி நானும், கார்த்திக்கும் TN 78 B 1168 TVS Sport வாகனத்தில் கார்த்திக் ஓட்ட நான் பின்புறம் அமர்ந்து சென்று கொண்டிருக்கும் போது உடுமலை – தாராபுரம் ரோட்டில் பெரும் பள்ளம் அருகே எதிர் திசையில் ஆஜர் எதிரி தன்னுடைய TN 78 9000 Maruthi swift காரை அதிவேகமாவும், அஜாக்கிரதையாகவும் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது குறித்து புகார் வாக்குமூலத்தில் தெரிவித்து விட்டு தற்போது எதிரியுடன் சமாதானமாகவிட்டதால் நடந்த சம்பத்தை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.17 18:42:27 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 108/2020 |
| Name | : Karthikeyan |
| P.W. | : 5 |
| Father Name | : Sokkalingam |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**17.07.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

**(சாட்சி இயல்பாக நடக்க இயலாமல் கைத்தடியுடன் வந்தார் சாட்சி கூண்டில் நிற்க இயலாமல் நாற்காலியில் அமர்ந்து விசாரிக்கப்பட்டார்)**

நான் தாராபுரத்தில் வசிக்கிறேன். விபத்திற்கு முன்பு நான் வாகன சர்வீஸ் ஸ்டேசனுக்கு வேலைக்கு சென்று வந்தேன். 09.01.2019ம் தேதி மதியம் 02.30 மணி அளவில் பெரும்பள்ளத்தின் அருகே நான் TVS STAR Sport வாகன எண் ஞாபகம் இல்லை இருசக்கர வாகனத்தில் மேற்கிலிருந்து கிழக்காக செல்லும் போது நான் ஓட்ட பின்னால் திருமூர்த்தி அமர்ந்து சென்று கொண்டிருக்கும் போது எங்களுக்கு பின்னார் துக்கையப்பன் ஒரு இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருக்கும் போது கிழக்கிலிருந்து மேற்காக வந்த Maruthi கார் எங்கள் மீது மோதியது அதில் எனக்கு தலை, கை, இடுப்பில் மற்றும் காலில் அடிபட்டது. விபத்தில் ஏற்பட்ட காயத்தால் தான் தற்போது என்னால் இயல்பாக நடக்க முடியவில்லை. விபத்தில் சுயநினைவு இழந்து சுமார் ஒரு வாரம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன்.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலீசார் விசாரணையில் கடந்த 09.01.2019 ம் தேதி நானும், திருமூர்த்தியும் TN 78 B 1168 TVS Sport வாகனத்தில் நான் ஓட்ட திருமூர்த்தி பின்புறம் அமர்ந்து சென்று கொண்டிருக்கும் போது உடுமலை – தாராபுரம் ரோட்டில் பெரும் பள்ளம் அருகே எதிர் திசையில் ஆஜர் எதிரி தன்னுடைய TN 78 9000 Maruthi swift காரை அதிவேகமாவும், அஜாக்கிரதையாகவும் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது மட்டும் அல்லாமல் அதே திசையில் TN 42 J 6223 Bajaj platina என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த துக்கையப்பன் மற்றும் வீரக்குமார் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது குறித்து கண்ணுற்ற சாட்சியாக போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானமாகவிட்டதால் நடந்த சம்பத்தை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.17 18:42:33 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்